ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA
தொடர்பூட்டல் திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk


# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2020 மே 15 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2020 பெப்புருவரி

### முக்கிய பண்புகள்

ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்த வேளையில் இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்தமையின் காரணமாக 2019 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் 2020 பெப்புருவரியில் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க விரைவாக மீட்சியடைந்த சுற்றுலாக் கைத்தொழில் 2020 பெப்புருவரி இறுதிப்பகுதியிலிருந்து படிப்படியாக பரவத் தொடங்கிய கொவிட்-19இன் தொற்றின் காரணமாக மீண்டும் பாதிக்கப்பட்டது. தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் அரச பிணையங்கள் சந்தையிலும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலும் காணப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2020 பெப்புருவரியில் தேறிய வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன. இவ்வபிவிருத்திகளின் காரணமாக 2020 மாச்சின் இரண்டாவது வாரம் வரையில் ஒப்பீட்டு ரீதியில் உறுதியாகக் காணப்பட்ட இலங்கை ரூபா 2020 மாச்சு இறுதிப்பகுதியிலிருந்து ஏப்பிறல் நடுப்பகுதி வரை குறிப்பிடத்தக்களவிற்கு தேய்வடைந்ததெனினும், அதன் பின்னர் உறுதியடையத் தொடங்கி 2020 மே முதல் வாரத்தில் கணிசமான உயர்வினை பதிவுசெய்தது. வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் கொவிட்-19இன் தொற்றின் காரணமாக 2020 மாச்சு மாதத்திலிருந்து குறிப்பிடத்தக்களவிற்கு பாதிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இப்பாதிப்பு குறிப்பாக வணிகப்பொருள் ஏற்றுமதிகள், சுற்றுலா, தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் ஆகிய துறைகளில் எதிர்பார்க்கப்படுகிறது.




இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட “மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு” ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள், பொருளாதாரக் குறிகாட்டிகள், மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு என்பனவற்றின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும். https://www.cbsl.gov.lk/en/monthly-trade-bulletin

**அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம் (அ)**

| வகை | பெப். 2019 ஐ.அ.டொ. மில் | பெப். 2020 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன – பெப் 2019 ஐ.அ.டொ. மில் | சன – பெப் 2020 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 981 | 988 | 0.7 | 2,019 | 1,993 | -1.3 |
| இறக்குமதிகள் | 1,432 | 1,562 | 9.1 | 3,088 | 3,298 | 6.8 |
| வர்த்தக மீதி (தேறிய) | -451 | -574 | | -1,069 | -1,304 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 475 (ஆ) | 391 (இ) | -17.7 | 935 (ஆ) | 822 (இ) | -12.2 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 500 | 527 | 5.4 | 1,046 | 1,108 | 6.0 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | -15 | -6 | | -29 | -22 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 235 | 89 | | 521 | 229 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 95 | 20 | | 167 | 79 | |
| நீண்ட காலக் கடன்கள் | 141 | 69 | | 354 | 150 | |
| திரண்ட நிலுவை | | | | -858 | 310 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை

(அ) தற்காலிகமானது

(ஆ) 2019 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது

(இ) இந்தத் தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2020 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்


(ஈ) இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகிறது

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

- 2020 பெப்புருவரியில் **வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை** 2019 பெப்புருவரியின் ஐ.அ.டொலர் 451 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 574 மில்லியனுக்கு விரிவடைந்தமைக்கு ஏற்றுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் தூண்டுதலாக அமைந்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2020இன் முதல் இரண்டு மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை 2019இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 1,069 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,304 மில்லியனுக்கு விரிவடைந்தது. வர்த்தகப் பற்றாக்குறையின் அதிகரிப்பிற்கு பங்களித்த முக்கிய காரணிகள் வரைபடம் 1இல் காட்டப்படுகின்றன.


- அதேவேளை, **வர்த்தக மாற்று விகிதம்** அதாவது இறக்குமதிகளின் விலைகளுக்கான ஏற்றுமதிகளின் விலை விகிதம் 2020 பெப்புருவரியில் 3.5 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) தேய்வடைந்தமைக்கு ஏற்றுமதி விலைகள் இறக்குமதிகளின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க விரைவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும்.

**வரைபடம் 1 : வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்த முக்கிய காரணிகள்: 2020 சனவரி – பெப்புருவரி (ஐ.அ.டொ. மில்லியன்)**





**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2019 - 2020)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக மாற்று விகிதம் (2019 – 2020)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்


- 2019 யூனிற்குப் பின்னர் முதல் தடவையாக 2020 பெப்புருவரியில் **வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 988 மில்லியனுக்கு 0.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பே வழிவகுத்தது. எனினும், 2019 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் வேளாண்மை மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன.

- **கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள் 2019 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் 2020 பெப்புருவரியில் சிறிதளவால் அதிகரித்தன. நீர்க்கல எரிபொருள்களினதும் வானூர்தி எரிபொருள்களினதும் உயர்ந்த விலைகளும் அதிகரித்த அளவுகளும் 2020 பெப்புருவரியில் பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் கணிசமாக அதிகரிப்பதற்கு வழிவகுத்தன. ஐ.அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கிடையிலும் புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் சிறிதளவிலேனும் அதிகரித்தமைக்கு புடவைகளினதும் மற்றும் தயாரிக்கப்பட்ட புடவைப்பொருட்களினதும் உயர்ந்த ஏற்றுமதிகளே காரணமாகும். பொறிகள் மற்றும் எந்திர

சாதனங்கள், இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை போன்ற ஏனைய முக்கிய துணை வகைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் இம்மாத காலப்பகுதியில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. எனினும், இரத்தினக்கல், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், மரம் மற்றும் தாள் உற்பத்திகள், தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள், அடிப்படை உலோகம் மற்றும் அதன் பொருட்கள், இரசாயன உற்பத்திகள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2019 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன.


- 2020 பெப்புருவரியில் **வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தன. 2020 பெப்புருவரியில் வாசனைத்திரவியங்கள் மற்றும் தெங்கிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்தளவு ஏற்றுமதி அளவுகள் வழிவகுத்த வேளையில், தாழ்ந்த சராசரி ஏற்றுமதி விலைகள் தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் வீழ்ச்சியைத் தோற்றுவித்தது. ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்தான குறைந்த கேள்வியின் காரணமாக கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் 2020 பெப்புருவரியில் வீழ்ச்சியடைந்தன. மாறாக, சிறுவேளாண்மை உற்பத்திகள் மற்றும் இயற்கை இறப்பரின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் இம்மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன.
- 2020 பெப்புருவரியில் **கனிமபொருள் ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு நிலம் சார்ந்த பொருட்கள் மற்றும் கற்களின் ஏற்றுமதிகளிலிருந்தான குறைந்த வருவாய்களே வழிவகுத்தது.
- 2020 பெப்புருவரியில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 5.2 சதவீதத்தினால் மேம்பட்ட வேளையில் ஏற்றுமதி அலகு பெறுமதிச் சுட்டெண் 4.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, 2019 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உயர்ந்த அளவுகள் முழுக் காரணமாக அமைந்தமையினை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | பெப் 2019 (ஐ.அ.டொ. மில்.) | பெப் 2020 (ஐ.அ.டொ. மில்.) | மாற்றம் (%) | சன-பெப் 2019 (ஐ.அ.டொ. மில்.) | சன-பெப் 2020 (ஐ.அ.டொ. மில்.) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| 1. **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **769.5** | **790.0** | **2.7** | **1,595.9** | **1,602.6** | **0.4** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 35.5 | 36.6 | 3.1 | 88.6 | 72.1 | -18.6 |
| விலங்குத்தீன் | 9.7 | 11.0 | 12.4 | 26.6 | 19.6 | -26.1 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 465.6 | 468.1 | 0.5 | 941.5 | 942.2 | 0.1 |
| இதில் ஆடைகள் | 434.0 | 433.7 | -0.1 | 878.5 | 869.8 | -1.0 |
| புடவைகள் | 23.3 | 25.1 | 7.6 | 46.3 | 52.4 | 13.1 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 8.3 | 9.3 | 12.4 | 16.7 | 20.1 | 20.2 |
| இறப்பர் உற்பத்திகள் | 69.7 | 71.5 | 2.6 | 150.3 | 141.7 | -5.7 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 27.1 | 21.3 | -21.3 | 51.2 | 46.0 | -10.1 |
| பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் | 32.2 | 34.8 | 7.9 | 69.1 | 65.3 | -5.5 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 7.2 | 6.9 | -3.9 | 16.1 | 14.1 | -11.9 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 38.6 | 57.8 | 50.0 | 76.0 | 140.6 | 84.9 |
| இரசாயன உற்பத்திகள் | 13.2 | 12.9 | -2.2 | 28.1 | 28.1 | 0.0 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 15.4 | 11.2 | -27.3 | 27.5 | 21.2 | -22.9 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 0.8 | 3.0 | 279.7 | 6.9 | 7.7 | 13.0 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 10.6 | 7.3 | -30.5 | 23.7 | 12.9 | -45.5 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 5.4 | 6.0 | 12.2 | 12.2 | 11.5 | -5.3 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 15.2 | 12.1 | -20.7 | 29.3 | 24.8 | -15.4 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.4 | 2.6 | 12.2 | 4.8 | 4.8 | -0.1 |
| ஏனையவை | 20.9 | 26.6 | 27.5 | 44.1 | 49.7 | 12.9 |
| 2. **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **207.8** | **195.1** | **-6.1** | **415.4** | **383.8** | **-7.6** |
| தேயிலை | 110.6 | 107.8 | -2.5 | 221.4 | 207.5 | -6.2 |
| இறப்பர் | 2.3 | 3.1 | 34.4 | 5.1 | 5.8 | 13.8 |
| தேங்காய் | 27.3 | 26.2 | -4.3 | 53.0 | 50.7 | -4.4 |
| வாசனைத்திரவியங்கள் | 28.6 | 18.7 | -34.7 | 56.4 | 38.1 | -32.4 |
| காய்கறிகள் | 2.5 | 2.4 | -4.5 | 5.1 | 5.0 | -2.4 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 1.9 | 1.7 | -6.8 | 4.0 | 3.4 | -15.5 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 9.3 | 14.7 | 58.4 | 17.7 | 29.0 | 64.4 |
| கடலுணவு | 25.3 | 20.6 | -18.8 | 52.7 | 44.2 | -16.1 |
| 3. **கனிம ஏற்றுமதிகள்** | **2.2** | **1.8** | **-15.2** | **4.6** | **3.9** | **-15.3** |
| 4. **வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.6** | **1.5** | **-10.8** | **3.4** | **3.0** | **-10.2** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **981.1** | **988.4** | **0.7** | **2,019.3** | **1,993.3** | **-1.3** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிச் செயலாற்றம்

- 2020 பெப்புருவரியில், **வணிகப்பொருட்களின்** இறக்குமதி மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் தொடர்ந்து மூன்றாவது மாதமாக அதிகரித்த போதும் மாதத்திற்கு மாத அடிப்படையில் வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இதன்படி, இறக்குமதிகள் மீதான செலவினம் 2020 பெப்புருவரியில் 9.1 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 1,562 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு நுகர்வு மற்றும் இடைநிலைப்பொருட்களின் உயர்ந்த இறக்குமதிகள் தூண்டுதலாக அமைந்ததுடன் 2019 பெப்புருவரியில் பதிவுசெய்யப்பட்ட தாழ்ந்த தளமும் ஓரளவிற்குக் காரணமாக அமைந்தது. எனினும், எரிபொருள் அல்லா இறக்குமதிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்து இறக்குமதிச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு எரிபொருள் இறக்குமதிகள் தூண்டுதலாக அமைந்தமையினை எடுத்துக்காட்டியது.


- 2020 பெப்புருவரியில் **நுகர்வுப்பொருட்களின்** இறக்குமதி மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்தது. உணவு மற்றும் குடிபானங்களின் கீழ் பாற்பண்ணை உற்பத்திகள் (முக்கியமாகப் பால்மா), காய்கறிகள் (முக்கியமாக பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு), சீனி, வாசனைத்திரவியங்கள் (முக்கியமாக மிளகாய்), குடிபானங்கள் (முக்கியமாக வெறியக் குடிவகைகள்) என்பனவற்றின் இறக்குமதிகள் 2020 பெப்புருவரியில் அதிகரித்தன. உணவல்லா நுகர்வுப்பொருட்களின் வகைகளின் கீழ் தனியாள் உந்து ஊர்திகள் மற்றும் ஏனைய துணைவகைகளிலுள்ள பெரும்பாலான பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்தமைக்கு, 2019 பெப்புருவரியில் தனியாள் உந்து ஊர்திகள் மற்றும் இன்றியமையாதனவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி தொடர்பில் நிலவிய கட்டுப்பாடுகளிலிருந்து தோன்றிய தாழ்ந்த தளமே காரணமாகும்.

- 2020 பெப்புருவரியில் **இடைநிலைப்பொருட்களின்** இறக்குமதி மீதான செலவினமும் ஓராண்டிற்கு முன்னைய நிலைமையிலிருந்தும் அதிகரித்தது. இம்மாத காலப்பகுதியில் மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி என்பனவற்றின் உயர்ந்தளவான இறக்குமதிகள் எரிபொருள் மீதான செலவினம் அதிகரிப்பதற்கு வழிவகுத்த போதும் சராசரி இறக்குமதி விலைகள் 2019 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே காணப்பட்டன. உணவுத் தயாரிப்புக்கள் (முக்கியமாக தாவர எண்ணெய்), இறப்பர் மற்றும் அதன் பொருட்கள், வளமாக்கி (முக்கியமாக யூறியா), இரசாயன உற்பத்திகள் என்பன மீதான இறக்குமதிச் செலவினமும் 2020 பெப்புருவரியில் அதிகரித்தன. எனினும், அடிப்படை உலோகங்கள், புடவைகள் மற்றும் புடவைப்பொருட்களின் இறக்குமதிகள் கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு கொவிட்-19 நோய்ப் பரவலின் காரணமாக வழங்கல் சங்கிலி இடையூறுகளுக்குட்பட்டமையே காரணமாயமைந்தது.

- அதேவேளை, 2020 பெப்புருவரியில் **முதலீட்டுப்பொருட்களின்** இறக்குமதிகள் மீதான செலவினம் 2019 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தது. பொறிகள் மற்றும் கருவிகளின் இறக்குமதி மீதான செலவினம் வீழ்ச்சியடைந்த போதும் பொறிகள் மற்றும் கருவிகளின் உதிரிப்பாகங்களின் இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் கட்டடப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினமும் வீழ்ச்சியடைந்தது.


- 2020 பெப்புருவரியில் இறக்குமதி அளவுச் சுட்டெண் 10.0 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அலகு பெறுமதிச் சுட்டெண் 0.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு 2019 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த அளவுகளே முழுத் தூண்டுதலாக அமைந்தமையினை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: இறக்குமதி அளவுச் சுட்டெண்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)

| வகை | பெப் 2019 (ஐ.அ.டொ. மில்.) | பெப் 2020 (ஐ.அ.டொ. மில்.) | மாற்றம் (%) | சன–பெப் 2019 (ஐ.அ.டொ. மில்.) | சன–பெப் 2020 (ஐ.அ.டொ. மில்.) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப்பொருட்கள்** | **259.9** | **327.3** | **25.9** | **560.4** | **699.0** | **24.7** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 85.7 | 135.8 | 58.5 | 196.9 | 283.4 | 43.9 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 3.2 | 4.5 | 41.6 | 7.1 | 9.9 | 39.1 |
| பண்ணை உற்பத்திகள் | 6.1 | 28.0 | 359.4 | 24.0 | 64.3 | 168.3 |
| இதில் பால்மா | 4.8 | 26.4 | 445.9 | 21.6 | 61.0 | 183.0 |
| காய்கறிகள் | 19.9 | 30.0 | 51.1 | 44.5 | 65.9 | 48.3 |
| கடலுணவு | 14.9 | 11.7 | -21.0 | 33.3 | 28.9 | -13.2 |
| சீனி மற்றும் இனிப்புவகை | 13.9 | 25.8 | 85.4 | 28.9 | 45.8 | 58.8 |
| வாசனைத்திரவியங்கள் | 10.0 | 13.4 | 33.3 | 18.8 | 23.7 | 26.2 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 17.8 | 22.3 | 25.8 | 40.3 | 44.7 | 10.9 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 174.2 | 191.4 | 9.9 | 363.5 | 415.7 | 14.3 |
| தனியாள் ஊர்திகள் | 48.1 | 53.6 | 11.3 | 97.7 | 116.9 | 19.7 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 36.4 | 42.2 | 16.1 | 77.7 | 91.0 | 17.2 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 15.4 | 19.7 | 27.9 | 29.7 | 39.7 | 33.6 |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 24.2 | 27.8 | 14.6 | 52.6 | 58.0 | 10.3 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 18.4 | 18.0 | -2.5 | 38.8 | 41.3 | 6.4 |
| வீட்டு உபயோக மற்றும் தளபாடப் பொருட்கள் | 11.4 | 13.2 | 15.4 | 24.8 | 31.0 | 25.0 |
| ஏனைய நுகரக்கூடிய உணவல்லாப்பொருட்கள் | 20.3 | 17.1 | -15.7 | 42.4 | 37.8 | -10.7 |
| **2. இடைநிலைப்பொருட்கள்** | **831.0** | **911.5** | **9.7** | **1,787.1** | **1,846.0** | **3.3** |
| எரிபொருள் | 281.8 | 418.7 | 48.6 | 610.8 | 710.6 | 16.3 |
| இதில் மசகெண்ணெய் | 48.0 | 93.4 | 94.9 | 135.8 | 140.3 | 3.4 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 201.5 | 289.4 | 43.7 | 387.5 | 496.6 | 28.2 |
| நிலக்கரி | 32.4 | 35.9 | 10.8 | 87.5 | 73.6 | -15.9 |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 16.4 | 6.3 | -61.3 | 32.9 | 20.2 | -38.5 |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 212.2 | 182.0 | -14.2 | 474.7 | 482.8 | 1.7 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 31.0 | 32.3 | 4.3 | 69.6 | 70.5 | 1.3 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 12.6 | 15.7 | 24.7 | 27.8 | 36.3 | 30.7 |
| கோதுமை மற்றும் சோளம் | 26.7 | 8.4 | -68.5 | 41.2 | 17.3 | -58.0 |
| அடிப்படை உலோகங்கள் | 59.4 | 20.4 | -65.6 | 106.1 | 45.6 | -57.0 |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 43.3 | 45.2 | 4.2 | 96.3 | 94.9 | -1.5 |
| இரசாயன உற்பத்திகள் | 60.3 | 64.4 | 6.8 | 136.4 | 138.5 | 1.5 |
| வளமாக்கி | 5.3 | 13.2 | 148.8 | 9.1 | 19.2 | 111.9 |
| இறப்பர் மற்றும் அவற்றின் பொருட்கள் | 16.0 | 24.3 | 52.0 | 35.6 | 46.9 | 31.6 |
| ஏனைய இடைநிலைப்பொருட்கள் | 66.0 | 80.5 | 21.9 | 146.6 | 163.1 | 11.3 |
| **3. முதலீட்டுப்பொருட்கள்** | **341.0** | **318.8** | **-6.5** | **739.5** | **747.0** | **1.0** |
| பொறி மற்றும் கருவிகள் | 193.9 | 183.5 | -5.4 | 425.1 | 442.1 | 4.0 |
| கட்டடப் பொருட்கள் | 108.8 | 102.5 | -5.8 | 240.8 | 221.8 | -7.9 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 38.0 | 32.6 | -14.2 | 72.8 | 82.5 | 13.3 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.3 | 0.3 | 1.5 | 0.8 | 0.7 | -19.7 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.5** | **4.8** | **849.6** | **0.8** | **5.7** | **580.4** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,432.4** | **1,562.3** | **9.1** | **3,087.9** | **3,297.7** | **6.8** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **1,150.6** | **1,143.6** | **-0.6** | **2,477.1** | **2,587.1** | **4.4** |

(அ) தற்காலிகமானவை
**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி


## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

- கொவிட்-19 தொற்றின் உலகளாவிய பரவல் 2020 பெப்புருவரியிலிருந்து உலகளாவிய சுற்றுலா தொழில்துறையினைக் கணிசமானளவிற்குப் பாதித்தது. இதே போக்கினை இலங்கையும் அனுபவித்தது. 2020 பெப்புருவரியில் **சுற்றுலாப் பயணிகளின் வருகைகள்** 2019 பெப்புருவரியின் 252,033 இலிருந்து 207,507 இற்கு 17.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. சீனாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகை குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. 2020 பெப்புருவரியில் சீனாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2019 பெப்புருவரியின் வருகைகளான 28,039 உடன் ஒப்பிடுகையில் 2,096 ஆக மட்டுமே காணப்பட்டன. பிரான்சு, ஐக்கிய அமெரிக்கா, கனடா மற்றும் ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜேர்மனி போன்ற முக்கிய நாடுகளிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் வீழ்ச்சியடைந்த வேளையில் ருஷியா, போலந்து மற்றும் உக்ரேன் நாடுகளிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2020 பெப்புருவரியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்தன.

- இந்நிகழ்வுகளின் காரணமாக 2020 பெப்புருவரியில் **சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்** 2019 பெப்புருவரியின் ஐ.அ.டொலர் 475 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 391 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இதன் காரணமாக 2020இன் முதலிரண்டு மாத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 822 மில்லியனாகக் காணப்பட்டன. கொவிட்-19 தொற்றின் தாக்கம் காரணமாக சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் கடுமையாகப் பாதிக்கப்படும் போல் தெரிகிறது.


- அதேவேளை, 2020 பெப்புருவரியில் **தொழிலாளர் பணவனுப்பல்கள்** ஐ.அ.டொலர் 527 மில்லியனாக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 5.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2020இன் முதலிரண்டு மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 1,108 மில்லியனாக விளங்கி 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 6.0 சதவீதத்தினால் அதிகரித்தது. முக்கிய பணவனுப்பல் மூலங்களான இத்தாலி, தென்கொரியா மற்றும் மத்திய கிழக்கு போன்ற நாடுகளும் கொவிட்-19 தொற்றின் காரணமாகவும் பொருளாதாரத்தின் மெதுவடைந்த தன்மையினாலும் தொழிலாளர் பணவனுப்பல்கள் எதிர்வரும் மாதங்களில் பாதிக்கப்படக்கூடிய தன்மைகளைக் கொண்டிருக்கின்றன.

**வரைபடம் 8: சுற்றுலாப்பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து நாடுகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 9: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்
இலங்கை மத்திய வங்கி


## நிதியியல் பாய்ச்சல்கள்

- 2020 பெப்புருவரியில் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையில் ஐ.அ.டொலர் 118 மில்லியன் கொண்ட வெளிநாட்டு முதலீகளின் வெளிப்பாய்ச்சலொன்று பதிவுசெய்யப்பட்டமையின் காரணமாக 2020இன் முதலிரண்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 99 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்று தோன்றியது.
- முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கிய கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் 2020 பெப்புருவரியில் ஐ.அ.டொலர் 6 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2020இன் முதலிரண்டு மாத காலப்பகுதியில், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஐ.அ.டொலர் 22 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன.
- மேலும், அரசிற்கான நீண்ட காலக் கடன்களின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 69 மில்லியனாக விளங்கியதுடன், வெளிநாட்டு நாணயப் பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் மீள்கொடுப்பனவுகள் இரண்டும் ஒத்தமட்டத்தில் காணப்பட்டமையின் காரணமாக 2020 பெப்புருவரியில் ஐ.அ.டொலர் 0.4 மில்லியன் கொண்ட சிறிதளவு தேறிய உட்பாய்ச்சலொன்று தோன்றியது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

- 2020 பெப்புருவரி இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.9 பில்லியனாக விளங்கி 4.7 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டன. அதேவேளை, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2020 பெப்புருவரியில் ஐ.அ.டொலர் 10.9 பில்லியனாக விளங்கி 6.5 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**





**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

- 2020 மாச்சு நடுப்பகுதி வரை உறுதியாகக் காணப்பட்ட இலங்கை ரூபா 2020 மாச்சு பிற்பகுதியிலிருந்து ஏப்பிறல் நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் கடுமையாகத் தேய்வடைந்தமைக்கு கொவிட்-19 தொற்றின் பரவல் காரணமாக சந்தையில் நிலவிய ஊக நடத்தையே முக்கிய காரணமாக அமைந்தது. எனினும், செலாவணி வீதம் படிப்படியாக உறுதியடைந்து 2020 மே முதல் வாரத்தில் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்தது. இதன்படி, 2020 மே 15ஆம் திகதியளவில் ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 3.4 சதவீதத்தினால் தேய்வடைந்தது. குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2020 மே 15 வரையான இவ்வாண்டுப் பகுதியில் ரூபா யப்பானிய யென்னுக்கெதிராக தேய்வடைந்த வேளையில் யூரோ, ஸ்டேர்லிங் பவுண், கனடியன் டொலர், அவுஸ்திரேலிய டொலர் மற்றும் இந்திய ரூபா என்பனவற்றிற்கெதிராக உயர்வடைந்தது.

**வரைபடம் 11: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | 2019 | 2020 (மே 15 வரை) உயர்வு (+)/ தேய்வு (-) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +0.6% | -3.4% |
| யூரோ | -12.7% | +2.6% | +0.3% |
| பவுண் ஸ்ரேலிங் | -11.4% | -2.8% | +3.9% |
| யப்பானிய யென் | -18.1% | -1.0% | -4.6% |
| கனேடியன் டொலர் | -9.3% | -3.7% | +4.1% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | +1.3% | +4.9% |
| இந்தியன் ரூபா | -8.7% | +2.6% | +2.2% |

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி